முருகப்பெருமான் துணை

**மகான் மானக்கஞ்சாற நாயனார் அருளிய யோக பிரசன்ன ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

01.06.2021, செவ்வாய்கிழமை

1. ஆனந்த வடிவாக ஞானமதை
   ஆறுமுகன் சக்தியாக அருளும்
   ஞான தேசிகனே அரங்கனே
   ஞாலமதில் உன்பெருமை கூறி
2. கூறியே யோகபிரசன்ன ஆசி
   குறைவிலா பிலவ விடைதிங்கள்
   கருதியே மூவாறுதிகதி குசன்வாரம்
   (பிலவ வருடம் வைகாசி மாதம் 18ம் நாள், 01.06.2021, செவ்வாய்கிழமை)
   கண்டுரைப்பேன் மானக்கஞ்சாற நாயனாரும்
3. நாயனாரும் உலகநலமுற உரைப்பேன்
   நன்மைதரும் ஞானிகள் பூசை
   தயவாக அரங்கனும் செய்து
   தரணிகாத்து வருதல் காண
4. காணவே உலக மக்கள்
   கண்டு வணங்கி பிரணவக்குடிலில்
   ஞான உபதேசம் ஏற்றிட
   நம்பகமான நிலைகள் பெருகி
5. பெருகியே ஞான பூசைதனை
   பிசகின்றி செய்யும் வாய்ப்பும்
   முருகப் பெருமானின் நாமசெபம்
   முழுமை ஞானமும் தந்தருளும்
6. அருளும் பொருளும் வளமும்
   ஆயுள் திடமும் எளிதாய் அருளும்
   ஆறுமுக அரங்க ஞானியரை
   அனைவரும் குருவாய் ஏற்றுவர
7. வருகவே நல்ல தலைமையும்
   வள்ளல் தன்மை கொண்ட
   தருமஞான ஆட்சியும் அமையும்
   தவசி அரங்கன் துணைவழி
8. துணைவழி கலியுக மக்கள்
   தொண்டு செய்து வருக
   இணைந்து தருமம் வளர்ந்து
   எங்கும் அரங்கன் புகழ்பரவ
9. பரவ பாதிப்புகள் ஓடும்
   பரோபகார சிந்தை வளர
   பரவிடும் நச்சுக்கிருமி அல்லலும்
   பாருலகை விட்டு விலகும்

10. விலகிடும் மக்களின் துன்பம்
விலகிடும் கலியின் கஷ்டங்கள்
கலகம் மாச்சர்யம் கூட
கந்தவேலன் வழிபாட்டால் விலகிநிற்கும்

11. நிற்கவே ஞான பூமியாக
நிலைமைகள் யாவும் மாற
ஏற்றுவாரீர் அரங்க ஞானியின்
ஏழாம்படை வீடு நோக்கியே

யோகபிரசன்ன ஆசி முற்றே

–சுபம்–